## பொருளடக்கம்


- சூரசம்ஹாரம்

  நவதேவியர்களின் தோற்றம்

  முருகனின் திருவிளையாடல்கள்

  சூரபத்மனை ஆட்கொள்ளுதல்

  முருகனுக்கு திருமணம் நடைபெறல்

- கந்தசஷ்டி
- கந்தசஷ்டி விரதத்தை கடைபிடிப்பது எப்படி?
- முருகனின் அறுபடை வீடுகள்


# சூரசம்ஹாரம் !!

இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் படைப்பவரான பிரம்மதேவரின் புத்திரர்களில் ஒருவர் காசிபர். அவர் சிவபெருமானை நோக்கி கடுமையாக தவமிருந்து சிவபெருமானிடம் பல வரங்களை பெற்றவர். ஒரு சமயம் தேவர்கள் யாவரும் வலிமை இழந்து இருந்த காலத்தில் அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியார் அசுரர்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் சக்திகளை அதிகரிக்கும் பொருட்டும் காசிபரின் தவ வலிமையால் அசுர குலம் தழைக்கும் பொருட்டும் ஒரு திட்டம் செய்தார்.

தனது திட்டத்தை செயல்படுத்த அசுர குலத்தை சேர்ந்த அசுரேந்திரன் மற்றும் மங்களகேசினியின் தம்பதியருக்கு புதல்வியாக பிறந்த சுரசையைத் தேர்ந்தெடுத்து அவளுக்கு தான் கற்ற பல மாய கலைகளையும் கற்று தந்தார் சுக்கிராச்சாரியார். கலைகளை கற்றுத்தேர்ந்த சுரசையை பலவாறு சோதித்தார். சுக்கிராச்சாரியாரின் பல கடினமான செயல்களில் அகப்படாமல் தான் கற்ற கலைகளை கொண்டு வெற்றி கொண்டாள் சுரசை. அவளின் சாதுர்யமான

அறிவையும், செயல்திறனையும் கண்ட சுக்கிராச்சாரியார் இன்று முதல் மாயா என்று அழைக்கப்படுவாய் என்றும், பின்பு தனது மனதில் திட்டமிட்டு இருந்த எண்ணத்தை பற்றியும் கூறினார்.

மாயாவிடம், அசுர குல தேவர்கள் வலிமையும், அழிவுமின்றி இருக்க வேண்டும் என்பதே உன் தந்தையான அசுரேந்திரனின் ஆசையும், எண்ணமும் ஆகும். ஆனால், அசுர குலத்தை சேர்ந்தவர்களோ தேவர்களால் தொடர்ந்து அழிக்கப்படுகிறார்கள். நம் குலத்தை சார்ந்தவர்களின் அழிவைத் தடுக்க இயலக்கூடிய வாய்ப்பு இப்பொழுது உனக்கு உள்ளது. நீ முயன்று அதில் வெற்றி பெற்றுவிட்டால் தேவர்களை நாம் அடக்கி நமது அதிகாரத்தையும், ஆட்சியையும் ஈரேழு உலகிலும் நிலைநாட்ட இயலும் என்றார்.

இதை கேட்டு ஆச்சரியம் மற்றும் அதே சமயம் மகிழ்ச்சியும் அடைந்த மாயா, அசுர குலம் தழைக்க நான் என்ன செய்ய வேண்டும்? குருவே... என்று சுக்கிராச்சாரியாரிடம் கேட்டார். அதற்கு அவர் தன் மனதில் இருந்த திட்டத்தை மாயா அறிந்து கொள்ளும் விதமாக விளக்கினார். பின்பு குருநாதரின் ஆணையை ஏற்று மாயா தன் தந்தையான அசுரேந்திரனிடம் தனது குருவின் திட்டத்தை பற்றி கூற அசுரேந்திரரும் அகமகிழ்ந்து தனது மகளை வாழ்த்தி அனுப்பினார்.

சுக்கிராச்சாரியாரின் திட்டம் என்பது காசிபரை, மாயா மயக்கி அவரின் மூலம் மிகச்சிறந்த வலிமை மிகுந்த அசுர வீரர்கள் பலரை உருவாக்க வேண்டும் என்பதாகும். மாயா தனது மாய சக்திகளால் ஒரு புதிய மாளிகையையும், எழில் மிகுந்த நந்தவனத்தையும் காசிபர் இருந்த கானகத்தில் எழுப்பினாள். பின்பு காசிபரின் வருகைக்காக காத்துக்கொண்டு இருந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே காசிபரும் அங்கு வந்தார். பின்பு, மாயா தான் கற்ற மாய சக்திகளால் காசிபரை மயக்கினாள். இதனால் காசிபர் தான் பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தார்.

காசிபரும், மாயையும் முதலாம் பொழுதில் மானுட உருவத்தில் இணைந்ததால் மானுட தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் பொழுதில் சிங்க உருவில் இருவரும் இணைந்ததால் சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் பொழுதில் யானை உருவில் இணைந்ததால் யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் பொழுதில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்ததால் ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப்

பெண்ணும் பிறந்தனர். இவர்களின் இணைவின்போது வெளிப்பட்ட வியர்வை மூலம் ஆயிரக்கணக்கான அசுர வீரர்கள் உருவாகினர்.

காலங்கள் வெகுவாக கடந்தன. காஷிபரின் புத்திரர்கள் இளம் வயதை எட்டினர். ஒரு சமயம் புத்திரர்கள் அனைவரும் தங்களது தந்தையையும், தாயையும் வணங்கி நாங்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என்று வேண்டி நின்றனர். அவ்வேளையில் தந்தையான காசிபர் தர்ம வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்றும் ஈசன் ஒருவர் மட்டுமே அழிவில்லாதவர். அவரை எண்ணி நாம் வாழ்ந்து இந்த பிறவி பெருங்கடலை கடக்க வேண்டும் என்றும், தனது புத்திரர்களுக்கு ஆலோசனை கூறினார். பின்பு தனது தவ பணியை தொடர அவர் மீண்டும் தவத்தில் ஆழ்ந்தார்.

ஆனால், அவர்களின் தாயான மாயையோ தவ வாழ்க்கையிலும், ஆன்மிகத்திலும் விருப்பமில்லாமல் இவ்வுலகில் தோன்றிய நாம் சுகபோகங்களுடன் எல்லா லோகங்களிலும் ஆட்சி செய்ய வேண்டும் என்றும், தந்தையை காட்டிலும் தாய் சொல்லை பிள்ளைகள் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினாள். பின்பு நீங்கள் அனைவரும் அசுரலோகம் சென்று அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியாரை சந்தித்து அவரிடம் ஆசிப்பெற்று ஆலோசனை கேட்டு அதற்கு தகுந்தாற்போல் நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கூறினார். தாயின் முடிவை கேட்ட பின் அனைவரும் விரைவாக பாதாள லோகத்தில் உள்ள சுக்கிராச்சாரியாரை காண விரைந்து சென்றனர்.

தவத்தில் இருந்த காசிபர் கண் விழித்துப் பார்த்தபொழுது புத்திரர்கள் யாருமின்றி மாயை மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள். மாயை-யிடம் புத்திரர்கள் எங்கே? என்று வினவியபோது மாயை நிகழ்ந்த யாவற்றையும் காஷிபரிடம் எடுத்துரைத்தார். அதாவது, சுக்கிராச்சாரியாரின் ஆலோசனைப்படியே தான் இங்கு வந்ததாகவும், அசுர குலத்தை மேம்படுத்துவதற்காக மட்டுமே நான் தங்களுடன் இணைந்ததாகவும் கூறி அவ்விடம் விட்டு மறைந்து சென்றாள்.

அவள் மறைந்ததும், அவள் உருவாக்கிய அழகிய அரண்மனைகள் நந்தவனம் யாவும் மறைந்தன. மோக வயத்தால் அகப்பட்டு தான் செய்த தவறுகளால் இவ்வுலகம் அடையும் துன்பத்தை எண்ணி மிகவும் மனம் வருந்தினார் காசிபர். அப்பொழுது அவரின் தந்தையான பிரம்மதேவர் அவ்விடம் தோன்றி காமனின் இலக்கிற்கு எவரும் விதிவிலக்கல்ல. ஆகவே

நிகழ்ந்ததை எண்ணி மனம் வருந்தாமல் செய்த தவறுக்கான பரிகாரத்தை தேடுவாயாக... என்று கூறினார். நீர் செய்த இச்செயலால் விளையும் அனைத்து துன்பத்திற்கான தண்டனையை அளிக்கக்கூடியவர் சிவபெருமான் மட்டுமே. ஆகவே அவரை எண்ணி தவம் புரிந்து தண்டனையையும், மன்னிப்பையும் பெறுவாய் என்று கூறி மறைந்தார். தன் தந்தையின் கூற்றில் இருந்த உண்மையை உணர்ந்த காஷிபரும் தன் மனதை திடப்படுத்தி சிவபெருமானை நோக்கி தவம் புரியத் தொடங்கினார்.

அசுர லோகத்தில் இருந்த சுக்கிராச்சாரியாரை கண்ட அசுரர்கள் அனைவரும் அவரை வணங்கி ஆசிப்பெற்றனர். பின்பு மானிட உருவம் கொண்ட சூரபத்மன் சுக்கிராச்சாரியாரிடம் தகுந்த ஆலோசனை பெற்று சிவபெருமானை நோக்கி கடும் தவம் புரியத் தொடங்கினான். காலங்கள், யுகங்கள் என அனைத்தையும் மறந்து சிவபெருமானை எண்ணி அசுரனான சூரபத்மன் கடுந்தவம் புரியத் தொடங்கினான். தேவர்கள் அனைவரும் அவனின் தவத்தினை கண்டு மனதில் ஒரு விதமான அச்சத்தை கொண்டனர். தேவர்கள் அனைவரும் இணைந்து சூரபத்மனின் தவத்தை கலைக்க முயற்சி செய்தனர். இருப்பினும் அவர்களால் அவனது தவத்தை கலைக்க இயலவில்லை.

காலங்கள் விரைய எம்பெருமான் வருகை இல்லாமையால் இவ்வுலகில் நான் வாழ்ந்து என்ன பயன்? என எண்ணி தன் முன் ஒரு யாக வேள்வியை உருவாக்கினான் சூரபத்மன். தான் உருவாக்கிய வேள்வியில், தனது அங்கங்களை வெட்டி வேள்வி தீயில் எறிந்தான். இறுதியாக தனது சிரத்தை வெட்டும்போது மாபெரும் பேரொளியுடன் எம்பெருமான் அவருக்கு காட்சியளித்தார். உன் தவத்தாலும், உன் மன உறுதியாலும் யாம் மனம் மகிழ்ந்தோம்... வேண்டும் வரத்தைக் கேட்பாயாக... என்றார் எம்பெருமான்.

எம்பெருமானை வணங்கி அவரிடம் 108 யுகங்கள் உயிர் வாழவும், 1008 அண்டம் அரசாளவும், இந்திர ஞாலம் என்னும் தேரையும் வரமாக பெற்று, தான் என்றும் அழியாமல் உயிருடன் வாழ சாகாவரம் அளிக்க வேண்டும் என்றும் வேண்டி நின்றான். சிவபெருமான் சூரபத்மனை நோக்கி உலகில் தோன்றிய உயிர்களுக்கு பிறப்பு என்பது எவ்விதம் இருக்கின்றதோ, அவ்விதம் இறப்பு என்பது உண்டு. அதை யாராலும் மாற்ற இயலாது. இயற்கையை எவராலும் மீறி செயல்பட இயலாது என்று கூறி இவ்வரத்தினை தவிர்த்து வேறு வரத்தை கேட்பாயாக... என்று கூறினார்.

பின்பு சிறிது நேரம் சிந்தித்த சூரபத்மன் தனது அழிவு என்பது தங்களின் சக்தியால் மட்டுமே இருக்க வேண்டும். ஆனால், தங்களால் இருக்கக்கூடாது என்றும், என்னை அழிக்கக்கூடியவர் எந்த பெண்ணின் வயிற்றில் இருந்தும் பிறந்து இருக்கக்கூடாது என்றும், அவனால் மட்டுமே எனக்கு அழிவு நேரிட வேண்டும் என்ற வரத்தினை அளிக்க வேண்டும் என்று வேண்டினான் சூரபத்மன். எம்பெருமான் சூரபத்மன் வேண்டிய வரத்தையும், இந்திர ஞாலம் எனும் தேரையும் வரமாக அளித்தார். பின்பு, அவ்விடம் விட்டு மறைந்து கைலாயம் சென்றார்.

சிவபெருமான் மறைந்ததும் எந்தக் குழந்தையும் பெண்ணின் உதவியின்றி பிறந்திட இயலாது என்றும், தான் என்றும் அழிவில்லாதவன், தன்னை அழிக்க எவராலும் இயலாது என்றும், ஆணவத்துடன் தான் பெற்ற வரத்தின் மகிழ்ச்சியை, தன் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ள அவர்கள் இருக்கும் இடத்தினை நோக்கி பயணிக்கத் தொடங்கினார். அசுரலோகம் சென்று சுக்கிராச்சாரியாரை வணங்கி தான் பெற்ற வரத்தினை பற்றி எடுத்துரைத்து அவரிடம் ஆசிப்பெற்றான். பின், சூரபத்மன் பதுமகோமளை என்னும் பெண்ணை மணந்து வீரமகேந்திரபுரியை ஆட்சி செய்து வந்தான். பின்பு அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் தனது குடையின் கீழ் கொண்டு வந்தும், தனது சகோதரர்கள் மற்றும் தன்னைப் போன்ற பல அசுரர்களை கொண்டும் ஆட்சி புரிந்து வந்தான்.

சொர்க்கலோகம் சென்று இந்திரன் இல்லாமையால் இந்திரனின் மகனான சயந்தன் முதலான சொர்க்கலோகத்தை சேர்ந்த தேவர்களை கைது செய்து சிறையில் அடைத்து அவர்களுக்கு எண்ணிலடங்கா பல துன்பங்களை அளித்து வந்தான். அவர்கள் அடையும் துன்பத்தை கண்டு அசுரர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தனர். ஆனால், இந்திரனோ சூரபத்மனின் வருகையை உணர்ந்து இந்திரலோகம் விடுத்து பூலோகத்தில் வந்து மறைந்து கொண்டார். அசுரர்களின் அதர்ம செயலானது சொர்க்கலோகம் மட்டுமின்றி பூலோகத்தில் இருந்த அனைத்து ஜீவராசிகளையும் பாதித்தது. ஜீவராசிகளுக்கு இவர்கள் இழைத்த தீமைகளை கண்ட தேவர்கள் அனைவரும், இந்திரனுடன் கைலாயம் சென்று சிவபெருமானிடம் தாங்கள் அடைந்து வரும் துன்பங்களில் இருந்து தங்களைக் காக்க வேண்டும் என்றும் பணிந்து நின்றனர்.